நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஊராட்சியிலும் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்காக, கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை மற்றும் பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று ஒரு பிரமாண்டமான கட்டடம் கட்டி, கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அத்தகைய வாய்ப்புகள் இருக்கும்போது அதைப் பயன்படுத்தியிருக்கலாம். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதி மக்களின்மேல் உள்ள அக்கறையால் இவ்வளவு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அதேபோல, தற்போதைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, சிறப்பாக நம்முடன் பணியாற்றி, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார் என்பது எங்களுக்கும் தெரியும். இருந்தாலும், இதுவரை இல்லாத வகையில் தருமபுரி மாவட்டத்திலே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று எங்கள் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். இந்தக் கோரிக்கையும் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

6—

அங்கன்வாடி மையம்

***26862—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2021 பிப்ரவரி 4*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தொட்டதிம்மனஹள்ளி ஊராட்சி, டி. கொல்லப்பட்டி கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ராசிபுரம் நகராட்சியில் 55 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தைத் துவக்கி வைத்து, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்துச் சாலைகளையும் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்து, 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காட்டூர்–நெடுங்குளம் ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை இன்று துவக்கி வைத்து, 12,50,000 சகோதரிகள் உயர் கல்வி பெற்று, மூன்றாம் பாலினத்தோர் வாழ்க்கையில் முக்கிய அம்சமாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Mobile App துவக்கி வைத்த, இந்தியாவின் No. 1 முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து நாயகன் 2021–ல் நடக்கவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு அம்மா அவர்களுடைய ஆட்சியை மீண்டும் அமைக்கவிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக தங்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக, உற்றத் துணையாக, எதிரிகளே மூக்கில் கை வைக்கின்ற அளவுக்கு ஆட்சியையும், கட்சியையும் நடத்திச் செல்கின்ற, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்துத் தொகுதிகளும் என்னுடைய மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகளே என்ற மனநிறைவோடு, என்னுடைய தொகுதிக்குட்பட்ட அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

2021 பிப்ரவரி 4]

அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பிலும், ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி பொது மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தொட்டதிம்மனஹள்ளி ஊராட்சி, டி. கொல்லப்பட்டி கிராமத்தில் 290 நபர்கள் மட்டுமே வசிக்கின்றனர். அதில் 32 நபர்கள் மட்டுமே அங்கன்வாடி மையம்மூலம் பயன்பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையில், அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மொல்லம்பட்டி கிராமத்தில், 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அரசு அங்கன்வாடி மையக் கட்டடம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், டி. கொல்லப்பட்டியில் புதியதாக ஒரு அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களின் அரசை அடிபிறழாமல் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கும் இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு என்றும் உறுதுணையாகச் செயல்படும் ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். எங்கள் கோவைக்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும், கோவையை அ.தி.மு.க.-வின் எஃகுக் கோட்டையாக வழி நடத்தி செயல்பட்டுக்கொண்டிருக்கும் சாதனைச் செம்மல், இந்திய வரலாற்றிலே 143 விருதுகளைப் பெற்றுத் தந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த உள்ளாட்சி நாயகன் அவர்களை வணங்குகிறேன்.*

கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட 52-வது வட்டக் கிளைக் கழகத்திலுள்ள அங்கன்வாடிக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தக் கட்டடத்தைச் சீர்படுத்திக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110-ன்கீழ் பழுதடைந்த அங்கன்வாடி மையங்களைச் சீரமைப்பதற்கு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தலா 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அங்கன்வாடி மையங்களையும் சீரமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். பணி விரைவாக எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

கால்நடைக் கிளை நிலையம்

***71242—திரு. கோ. லோகநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதி, குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், கூடநகரம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக பல்வேறு அரிய திட்டங்களைச் செயல்படுத்தி, இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலே பல்வேறு சாதனைகளைப் புரிவதற்கு*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS